செ.வெ.எண்:25 நாள்:19.06.2021

**நாகப்பட்டினம் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் அனைவரும் தவறாமல் தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும். தேவூர் ஆரம்ப சுகாதார நிலையம், நாகூர், நாகப்பட்டினம் நகராட்சி நடுநிலைப்பள்ளி ஆகிய இடங்களில் நடைபெற்று வரும் தடுப்பூசி முகாம்களை பார்வையிட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர். அ.அருண் தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

நாகப்பட்டினம் மாவட்டம் தேவூர் ஆரம்ப சுகாதார நிலையம், நாகூர், நாகப்பட்டினம் நகராட்சி நடுநிலைப்பள்ளி ஆகிய இடங்களில் நடைபெற்று வரும் தடுப்பூசி முகாம்களை பார்வையிட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர். அ.அருண் தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அறிவுரைக்கிணங்க கோவிட் - 19 ஊரடங்கு தடை உத்தரவு காலத்தில் 18 வயதிற்கு மேற்பட்ட பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் அனைவரும் கொரானா தொற்று நோயால் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு அவசியம் கொரானா தடுப்பூசி போட்டு கொள்ள வேண்டும் என்று தமிழக அரசால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள 18 வயதிற்கு மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் அனைவரும் கொரானா தொற்று நோயால் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு அவசியம் கொரானா தடுப்பூசி போட்டு கொள்ள வேண்டும்.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் துணை இயக்குநர் சுகாதார பணிகள் அலுவகத்தின் கட்டுபாட்டின்கீழ் செயல்பட்டுவரும் ஒவ்வொரு வட்டார மருத்துவமனைகள் மூலம் கொரானா தொற்று நோயால் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு சிறப்பினமாக கருதி ஒவ்வொரு மாற்றுத்திறனாளிக்கும் கொரானா தடுப்பூசி போடப்பட்டு வருகிறது. எனவே மாற்றுத்திறனாளிகள் அனைவரும் வட்டார மருத்துவரை அணுகி கொரானா தடுப்பூசிபோட்டுக் கொள்ள வேண்டும்.

மேலும் நடக்க முடியாக மாற்றுத்திறனாளிகள் மற்றும் கடுமையாக பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு துணை இயக்குநர் சுகாதார பணி அவர்கள் மூலம் நடமாடும் சிகிச்சை பிரிவு வாகனத்தின் மூலம் அவரவர் இல்லத்திற்கே

சென்று மருத்துவ பணியாளர்களை கொண்டு கொரானா தொற்றுநோயால் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு கொரானா தடுப்பூசி போடப்படும் என்று நாகப்பட்டினம் ஆட்சித்தலைவர் மருத்துவர். அ. அருண் தம்புராஜ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**